RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s412

OPEN ACCESS

# தொழில் முனைவோரும் கரிசல் வட்டாரத் தொழில் வாய்ப்புகளும்

சு. இளையராஜா [அ, *], மு. சிவக்குமார் [ஆ]

[அ] தொழில் நிர்வாகவியல் துறை, தொலை நிலை கல்வி இயக்ககம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தொழில் முனைவோர் துறை, வணிக ஆய்வுகள் பள்ளி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# Entrepreneurs and Regional Industries

S. Ilayaraja [a, *], M. Sivakumar [b]

[a] Department of Management Studies, Directorate of Distance Education, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

[b] Department of Entrepreneurship Studies, School of Business Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: mbarmd@yahoo.com

Received: 09-03-2021
Revised: 30-04-2022
Accepted: 02-05-2022
Published: 10-07-2022

Check for updates

## ABSTRACT

The need for study is to bring out the neglected regional life in today's globalised environment. Among men who distinguish between language and race, their unique industries, the economy that grows on it, and the young entrepreneurs responsible for that economic growth are a record to be taken into consideration. Human needs such as food and clothing vary from human to human fingerprint. Requirements are also determined according to the geographical components in which they live. The materials available in the respective locality are the raw materials for entrepreneurship. Therefore, industries are carried out by their respective land based life. The study deals with the employment opportunities available in Thoothukudi, Kovilpatti, Sathur, Sivakasi, Tiruvilliputhur and Rajapalayam, identified as Karisalblock, and the young entrepreneurs emerging there.

**Keywords:** Regional Entrepreneurship, Professional Identities, Economic Growth

## முன்னுரை

கரிசல் வட்டாரம் என்றழைக்கப்படும் கந்தகபூமியில் அங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை ஒட்டியே தொழில்கள் தகவமைக்கப்பட்டுள்ளன. அம்மண்ணின் விளைபொருட்களை முன்னிட்ட தொழில்கள் இளம்தொழில் முனைவோரால் ஊக்குவிக்கப்படுகின்றன. இளம் தொழில் முனைவோருக்கான தொழில் குறித்த அடிப்படை அறிவும், புதியவாய்ப்புகளும் வாழ்தலின் அனுபவமாக கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. வட்டாரத் தனித்துவத்தை பிரதிபலிக்கும் வட்டாரத் தொழில்கள் அந்தந்த ஊர்ப்பெயர்களலேயே நிலைபெற்றுவிட்டன எனலாம்.

## மூலப்பொருட்களும் தொழில் நிறுவனங்களும்

மண்ணின் உற்பத்தியை முன்வைத்த தொழில்கள் கரிசல் பூமியில் இருக்கின்றன. “கரிசல்நிலம் என்பது கரிசல் மண் கொண்டது. இதுபெரும்பாலும் தண்ணீரை உறிஞ்சும் தன்மைகொண்டது.” என்ற

வேளாண்மை பல்கலைக்கழகத்தாரின் குறிப்பு அறியத்தக்கது (Soil Types in Tamil Nadu, 2013). இந்நிலத்தில் பருத்தி, மல்லி, உளுந்து, மக்காச்சோளம், தீவனச்சோளம், கம்பு, எள், திணை, மிளகாய், வெங்காயம், பச்சைப்பயறு, தட்டைப்பயறு, சூரியகாந்தி போன்றவைகளைப் பயிரிடுகின்றனர். அதனால், இப்பகுதிகளில் அரிசி, எண்ணெய், நூற்பாலைகள் மிகுந்து காணப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு திருவில்லிபுத்தூரை ஒட்டிய மேற்குத்தொடர்ச்சி மலையடியாரங்களில் அதிகமாக ஊக்குவிக்கப்படுவதால் பால் உற்பத்தி அதிகளவில் உள்ளது. ஆதலால், பால் பொருட்களினால் ஆனதயாரிப்புகள் தொழில்முனைவோரால் இங்குள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற பேதமின்றி கரிசல் பூமியின் இளம் தொழில்முனைவோர் இருக்கின்றனர். கல்லூரியில் படித்த கல்வி மட்டுமல்லாது அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் வணிகத் திட்டமிடுதலே வளர்ச்சிக்கான பாதை என்ற அறிஞர்தம் கருத்துப்புலப்பாடு உண்மையாகியுள்ளது. “கல்லூரிக்கல்வி மட்டுமே இதுவரை உங்களுக்கு கிடைத்திருக்கும். ஐடியா முதல் ரியாலிட்டி வரை நீங்கள் கல்லூரியில் அல்லது பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொள்ளாத அனைத்தையும் உள்ளடக்கியது தொழிலாகும். வெற்றிக்கான வழியை விரைவாகக் கண்டறிய“ யோசனைகளை யதார்த்தமாக மாற்றுவது ஒரு தொழில்முனைவோரின் மிகப்பெரிய சவால்” என்று அமெரிக்காவின் பிரபல வணிக முதலீட்டாளர் மார்க்கியூபன் விளக்குகிறார் (Paulynice, 2019). அத்தகைய அறிஞர்தம் கூற்று இளம் தொழில் முனைவோருக்கான சவால்களையும் தடைகளையும் மாற்றும் மந்திரச்சொல்லாகும்.

இன்றைய காலகட்டத்தில் வேலைக்குச் செல்லும் ஆர்வம் இளைஞர்களிடம் அதிகரித்துள்ளது. அனைவரும் தான்ஈட்டும் தொழிலில் இலாபம் அடையவே விரும்புகின்றனர். மூலப்பொருட்கள் எளிதில் கிடைக்கக்கூடியனவாக இருந்தால் தான் வெகுவாக இலாபம் ஈட்டலாம். ஆதலால் தான் அந்தந்தவட்டாரத்தின் உற்பத்திபொருட்கள் சார்ந்த தொழிலை ஊக்குவிக்கவேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். “வட்டாரத் தொழில் முனைவோர்களின் பங்களிப்பினை உலகறியச்செய்யும் விதமாக தொழில்முனைவு மற்றும் பிராந்திய மேம்பாடு என்ற பெயரிலான சர்வதேச ஆய்விதழ்கள் தம்பணியினை வட்டார தொழில் முனைவோருக்கு ஆதரவாக மேற்கொண்டுவருகின்றது. இவ்வித சூழல்கள்தான் தொழில்முனைவுக்கானத் தளம் என்று குறிப்பிடுகின்றது”. மேற்குறிப்பிட்ட அயல்நாட்டு இதழின் கருத்துப்படி கரிசல் வட்டாரத்தின் புவியியல் தகவமைப்பே இங்குள்ள தொழில்களுக்கு ஆதாரமாக அமைகின்றது எனலாம். குறிப்பாக சிவகாசியில் மேற்கொள்ளப்படும் தீப்பெட்டி, பட்டாசு தொழில்களுக்கான வெப்பமான சூழமைவு அத்தொழிலின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைகின்றது எனலாம். “இந்தியாவில் பட்டாசு உற்பத்தி செய்யும் தொழில் தமிழ்நாட்டிலுள்ள சிவகாசி நகரில்தான் அதிகளவிலுள்ளது. இங்கு 1928 இல் தீப்பெட்டி தொழிற்சாலையை உருவாக்கினர். அதன்பின்னரே பட்டாசு உற்பத்தி தொடங்கியது. இந்தியாவில் 90 விழுக்காடு பட்டாசு தயாரிப்பு சிவகாசியில்தான் மேற்கொள்ளப்படுகிறது”. தி இந்து தமிழ் - வெற்றிக்கொடி இணைப்பு என்ற இதழின் செய்திக்குறிப்பு கரிசல்வட்டாரத்தில் பட்டாசு உற்பத்தி இலாபகரமாக வளர்ந்து வருவதை உறுதிபடுத்துகின்றது.

## வட்டாரத் தொழில்சார்அடையாளங்கள்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தொழில்அடையாளங்கள் இருப்பது போன்று இப்பகுதியிலும் அங்கு கிடைக்கும் மூலப்பொருட்களின் அடையாளங்கள் தொழில்குறியீடாக அழைக்கப்படுகின்றன.“தொழில்சார் அடையாளங்களை வடிவமைப்பதில் வட்டாரங்களும் வட்டாரத்தில் கிடைக்கும் பொருட்களும் முக்கியபங்கு வகிக்கின்றன என்று ரெபேக்கா கில் மற்றும் கிரிகோரி எஸ். லார்சன் என்ற ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர் (Gill & Larson, 2014).

### தூத்துக்குடி மக்ரூன்

இந்த வெள்ளைநிற கூம்புவடிவ உணவுப்பொருள் தூத்துக்குடியின் அடையாளங்களுள் ஒன்றாகும். இப்பொருளின் வணிகம் இளம் தொழில்முனைதலில் அதிகரித்துள்ளது.

## திருவில்லிபுத்தூர் பால்கோவா

கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் விவசாயமக்களிடம் பெறப்படும் பாலில் இருந்து இத்தொழில் கிளைத்துள்ளது. மாடுவளர்ப்பு என்ற தொழிலூடாக, பல்கோவா தயாரிப்பு பெருமளவில் இப்பகுதியில் வாழும் இளம் தொழில்முனைவோரிடம் ஆர்வமிக்கதாக அமைந்துள்ளது.

## சாத்தூர் சேவு

கரிசல்மண்ணில் விளையும் மூலப்பொருளான கடலையின் மாவினால் 'சாத்தூர்சேவு' என்ற உணவுப் பொருள் தயாரிக்கப்படுகின்றது. சாத்தூரின் அடையாளமாகவே இத்தொழில் இப்பகுதியில் வளர்ந்து வருகின்றது.

## கோவில்பட்டிகடலைமிட்டாய்

இப்பகுதியில் விளையும் கடலையோடு கரும்புவெல்லம் இணைத்து தயாரிக்கப்படும் கடலைமிட்டாய்த் தொழில் அப்பகுதியில் அனைத்து வீடுகளிலும் நிகழும் சிறுதொழிலாக அமைந்துள்ளது. அனைத்து வயதினரும் அத்தொழிலில் ஈடுபடுகின்றனர் எனலாம்.

மேலைநாட்டு எழுத்தாளர் ரியான்லெவெஸ்க் என்பவர் வணிகங்களின் வெற்றி தோல்வி குறித்துக் கூறும்போது வெற்றிக்காக கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் கூறியுள்ளார். அக்கருத்துவட்டாரத் தொழில்முனைவுக்கு ஆதரவான குறிப்புரையாகும். "இளம் தொழில்முனைவோர் நீங்கள் எதை விற்கவேண்டும்? எதை உருவாக்க வேண்டும்? முதலில் நீங்கள் யார்? என்ற தேடலோடு நீங்கள் யாருக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஞானம் பெறுதல் அவசியம் என்கிறார்" (Levesque, 2019).

வட்டாரத் தொழில் முனைவில் மேற்கண்ட வழிமுறைகளை எளிதில் கண்டடையலாம். எதை உருவாக்க வேண்டும் என்ற எண்ணமும் யாருக்கான சேவை என்ற நோக்கமும் தன்னுடைய இனவாரியான மக்களின் விருப்பத்தேவையைப் பூர்த்திசெய்யும் எனலாம். ஆதலால், அத்தகைய தொழில் முனைவு பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது போன்று வட்டாரத்தின் மூலப்பொருளை விற்பனையாக மாற்றும் உத்திக்கும் வழிகோலும் எனலாம்.

கரிசல் வட்டாரத்தில் இளம் தொழில்முனைவோருக்கு இயல்பாகவே பாரம்பரிய தொழிலறிவு கிடைக்கின்றது எனலாம். இதனை அலிஸா ரிஸ்போலி என்ற அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "தொழில் முனைவோர் தமது பாடநூல்களில் கற்றுக் கொள்வதனை விட முந்தைய தலைமுறையினரின் அனுபவங்களில் இருந்து வெற்றிக்கானப் பாதையை அறிந்து கொள்ளலாம். பாடநூல்கள் தொழில் முனைதலின் நுணுக்கங்களை அனுபவசாலி தருவது போன்று கற்றுத்தராது. இன்று கல்லூரிக்குச் செல்லும் ஏராளமான மாணவர்கள் வெற்றிக்கான தங்களின் சொந்தபாதையை எதிர் நோக்குகிறார்கள். இது எளிதான சாதனை அல்ல என்றாலும், இதற்கு முன்பு இந்தசாலையில் நடந்துசென்ற வெற்றிகரமான தொழில் முனைவோரிடமிருந்து ஒருவர் எப்போதும் கற்றுக்கொள்ளலாம். ஒருவர் அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர்களின் தவறுகள் மற்றும் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளலாம்." என்ற கருத்துகளின் மெய்ப்பாடு வட்டாரத்தொழில்முனைவில் இலகுவாக அமைகின்றது (Rispoli, 2013).

## முடிவுரை

கரிசல் வட்டாரத் தொழில்வாய்ப்புகள் வருங்கால இளந்தலைமுறையினருக்கு தொழில் குறித்த அடிப்படை அறிவைத் தருவதுடன், தொழில் தொடங்கும் உத்வேகத்தை அளிக்கிறது. கரிசல்பூமியில் கிடைக்கும் உற்பத்தி பொருட்கள் அவர்களுக்கு தொழில்முனைவுக்கான ஆர்வத்தையும் தூண்டுகிறது. மேலும் இவ்வட்டார மாணவர்களுக்கு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் எடுத்துரைக்கிறது. சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி, இராஜபாளையம், தூத்துக்குடி போன்ற நகரங்களில் புவியியல்

தகவமைப்புக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படும் தானியங்களின் பயன்பாடுகளைக் கொண்டமைந்த சிறுதொழில்முனைவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாகும்.

## References


Gill, R., Larson, GS., (2014) Making the ideal (local) entrepreneur: Place and the regional development of high-tech entrepreneurial identity. Human Relations, 67(5) 519-542. https://doi.org/10.1177/0018726713496829

Levesque, R., (2019) Choose: The Single Most Important Decision before Starting Your Business, Hay House, United States

Paulynice, J.P., (2019) From Idea to Reality: An Entrepreneur's Guide to Meaningful Business Growth, Paulynice Consulting Group, LLC, United States.

Rispoli, A. (2013) The Young Entrepreneur: What Young Entrepreneurs Can Teach All People about Becoming Successful, Motivational Press, California, United States

Soil Types in Tamil Nadu, (2013) Tamil Nadu Agricultural University, Coimbatore, India https://agritech.tnau.ac.in/ta/Agriculture/agri_soilresource_agroclimate_ta.html



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License